

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.12.2025) முகாம் அலுவலகத்தில், சென்னை மயிலை பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி, சாந்தோம் பேராலயத்தின் அருட்தந்தை வின்சென்ட் சின்னதுரை, அருட்தந்தை தீபக் அந்தோணி ஆகியோர் சந்தித்த போது, அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தார்.



கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. அன்னூர் பேரூர் கழகத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி அய்யா கந்தசாமி அவர்களின் 95-வது பிறந்த நாளையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார். உடன் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மருத்துவர் கோகுல், பேரூர் செயலாளர் பரமேஷ்வரன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

### ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம் –

# எரகனஹள்ளி கிராமத்தில் யானை தாக்கி மருத்துவமனையில் சிகிச்சை!

## ஆறுதல் – முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி அறிவிப்பு!

சென்னை, டிச.26-

ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், எரகனஹள்ளி கிராமத்தில் காட்டு யானை தாக்கி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வரின் அறிவிப்பு வருமாறு:-

ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், எரகனஹள்ளி கிராமத்தில் வசித்துவரும் ஆள்மாதன் (வயது 60) என்பவர் கடந்த 13.12.2025 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் வீட்டிற்கு அருகே காட்டு யானை தாக்கியதில் படுகாயம் அடைந்து கர்நாடக மாநிலம், மைசூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஆள்மாதன் அவர்களுக்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர் விரைவில் நலம்பெற விழைகிறேன். மேலும், சிகிச்சை பெற்றுவருபவரின் மருத்துவச் செலவுகளை ஈடுசெய்யும் வகையில் அவரது குடும்பத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அறிவித்துள்ளார்.

### ஒரிசாவில் இந்து அமைப்பினர் வெறியாட்டம்!

# கிறிஸ்துமஸ் விழா பொருட்களை விற்கக் கூடாதாம்!

## சாலையோர வியாபாரியை மிரட்டி அராஜகம்!

புவனேஷ்வர், டிச. 26 -

ஒடிசாவில் கிறிஸ்துமஸ் பொருட்கள் விற்ற சாலையோர வியாபாரிக்கு இந்து அமைப்பினர் மிரட்டல் விடுத்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒடிசா மாநில தலைநகர் புவனேஸ்வரில் சாலை ஓரத்தில் கிறிஸ்துமஸ் தொப்பி, ஆடை உள்ளிட்ட கிறிஸ்துமஸ் பொருட்களை சிலர் விற்றனர். அப்போது அங்கு வந்த இந்து அமைப்பைச் சேர்ந்த ஒருவர், சாலை ஓர வியாபாரியை அங்கிருந்து புறப்படச் சொன்னார்.

ஏன் என கேட்டதற்கு இது இந்து நாடு, இங்கு கிறிஸ்துவ பொருட்கள் விற்கக் கூடாது என கூறியுள்ளார்.

மேலும், ஜெகன்நாதர் மண்ணில் வேறு யாருக்கும் இடமில்லை என்றும் தொடர்ந்து விற்பனை செய்தால் அனைத்தையும் தூக்கி வீசுவேன் என மிரட்டியுள்ளார்.

இந்த வீடியோவை இந்து நிர்வாகி ஒருவரே பதிவு செய்து இணையத்தில் வெளியிட்டுள்ளார். தற்போது இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி கண்டனங்களைப் பெற்று வருகிறது.

### பொள்ளாச்சி நகர இளைஞர் அணி சார்பில் – அமைப்பாளர் நவீன்குமார் ஏற்பாட்டில்

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு YOUTH WING TROPHY கிரிக்கெட் போட்டி!

## மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார்!

பொள்ளாச்சி, டிச. 26 –

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின் படி, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.ஈஸ்வர சாமி, கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் ஆலோசனையின் படி கோவை தெற்கு மாவட்டம்,

பொள்ளாச்சி நகர இளைஞர் அணி சார்பில் இளைஞர் அணி அமைப்பாளர் நவீன்குமார் ஏற்பாட்டில் பொள்ளாச்சி வடக்கு (மத்திய) ஒன்றிய செயலாளர் அய்யம்பாளையம் ராசு தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன், நகர கழக பொறுப்பாளர்கள் இரா.நவநீதகிருஷ்ணன் (வடக்கு), எம்.அமுத பாரதி (தெற்கு), நகர்மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை யில் வடுகபாளையம் சரவணா ஸ்போர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற YOUTH WING TROPHY கிரிக்கெட் போட்டியை மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார்,

இப்போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கு முதல் பரிசாக கோவை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி வடக்கு நகர பொறுப்பாளர் இரா.நவநீதகிருஷ்ணன் வழங்கும் 20,000 ரூபாய் ரொக்க பணம் மற்றும் சுழற்கோப்பையும், இரண்டாம் பரிசாக மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் வழங்கும் 15,000 ரூபாய் ரொக்க பணம் மற்றும் சுழற்கோப்பையும், மூன்றாம் பரிசாக , மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நிஷாந்த், பொதுக்குழு உறுப்பினர் சாந்தலிங்க குமார் வழங்கும் 10,000 ரூபாய் ரொக்க பணம் மற்றும் சுழற்கோப்பையும், நான்காம் பரிசாக மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல், முத்துக்குமார், யுவராஜ் வழங்கும் சுழற்கோப்பையும் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

இதில் மாவட்ட அவைத்தலைவர் மயூரா சுப்பிரமணியம், பொருளாளர் ஜெயபிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் மு.க.முத்து, அறங்காவலர் குழு உறுப்பினர் எஸ்.பி.எம்.பார்த்திபன், ஆனைமலை பேரூர் கழக செயலாளர் செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.ஜெயக்குமார், ஏ.ஆர்.வி.எஸ்.சந்தலிங்ககுமார், நகர அவைத்தலைவர் அழகப்பன், துணை செயலாளர் ச. தர்மராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பா ளர்கள் மணிமாறன் தென்றல், திருமலை ராஜா, நிஷாந்த், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அரவிந்த் வசந்தராம், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் கே.வி.ஆறுமுகம், தகவல் தொழில் நுட்ப அணி சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் சைஜு, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் அவிநாஷ் கார்த்திக்,

மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட ஆதி திராவிடர் அணி நலக்குழு துணை அமைப்பாளர் பஞ்சலிங்கம், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கருமாபுரம் சுரேஷ், நகர்மன்ற உறுப்பினர்கள் பி.ஏ. செந்தில்குமார், சுதா கார்த்திகேயன், வார்டு கழக செயலாளர்கள் அருண்கார்த்திக், மாரிமுத்து, விஜயகுமார், நகர இளைஞர் அணி அமைப்பாளர் யுவராஜ், துணை அமைப்பாளர்கள் ஈஸ்வரன், பட்டால் மணிகண்டன், சபரி முத்து வீரண், பாண்டிதுரை, பாலமுருகன், நகர சார்பு அணி

அமைப்பாளர்கள் பாண்டிராஜ், விக்னேஷ் பிரபு, பிரவீன் உள்பட கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். இறுதியில் அபூபக்கர் சித்திக் நன்றியுரையாற்றினார்.

### தி.மு.க. மகளிர் அணி

## கோவை வடக்கு மாவட்ட தலைவர், துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க, மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு கோவை வடக்கு மாவட்டம் மறுசீரமைக்கப்பட்டதால் ஏற்கனவே மகளிர் அணி மாவட்ட தலைவராக நியமிக்கப்பட்ட ராணி அவர்கள் திருப்பூர் வடக்கு மாவட்ட நிர்வாகத்தில் வருவதால் அவருக்கு பதிலாக **பி. மலர்விழி** (1டி, மேற்கு சித்திரைசாவடி, உலியம்பாளையம், தீனம்பாளையம் அஞ்சல், தொண்டாமுத்தூர் மெயின் ரோடு, கோவை 641109) அவர்கள் கோவை வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவராக நியமிக்கப்படுகிறார். மேலும், துணை அமைப்பாளர்களாக,

1. **கி. சாவித்திரி**
   10/44, மாரியம்மன் கோவில் வீதி,
   பூச்சியூர், என்.எஸ்.என். பாளையம்,
   கோவை - 641031
2. **எம். உமா மூர்த்தி**
   38, வெள்ளிப்பாளையம் ரோடு,
   மேட்டுப்பாளையம் - 641301,
   கோவை. ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"** சென்னை-18. நாள் : 24.12.2025.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,** செயலாளர் தி.மு.க. மகளிர் அணி





ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி தெற்கு நகரம் பாகம் எண் 166 –ல் காதர் பேட்டை பகுதியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தேர்தல் பரப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தெற்கு நகர செயலாளர் ஏ.ஜி.ராமச்சந்திரன் கலந்து கொண்டு தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். இதில் முன்னாள் நகர துணைச் செயலாளருமான அஸ்கர் அலி, மனிதநேய ஜனநாயக கட்சியின் மாநில துணைச் செயலாளர் ரகுமான், முகமது ஈசாக், நகர மன்ற உறுப்பினர் கங்கை அம்மாள் ரவி, பி.எல்.ஏ, செந்தில்குமார், பி.எல்.ஏ 2, அசார், பி.டி.ஏ. ஹரிஹரகுகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மகளிர் அணி

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க, மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளராக திருமதி. **ஆர். கலைவாணி** (19, காமராஜ் நகர், 2வது தெரு, கே.ஏ.பி. திருமண மண்டபம் பின்புறம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"** சென்னை - 18. நாள் : 24.12.2025.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,** செயலாளர் தி.மு.க. மகளிர் அணி

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செய்துள்ள சாதனையால்

# எத்தனை முனை போட்டிகள் நடந்தாலும் தி.மு.க.வை வீழ்த்த முடியாது!

## புதுக்கோட்டையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை, டிச. 26 -

புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட வடக்கு ராஜ வீதியில் உள்ள தி.மு.க. மாவட்ட அலுவலகமான பெரியண்ணன் மாளிகையில் மறைந்த தி.மு.க. மாநகர செயலாளர் அ.செந்திலின் முதலாம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப் பட்டது. இதில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவவி.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, மேயர் திலகவதி செந்தில் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகி கள் கலந்து கொண்டு மறைந்த தி.மு.க. மாநகர செயலாளர் ஆ.செந்தில் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இதன் பின்னர் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில்:

ஒத்தக்கருத்துடைய கட்சிகள் ஓரணியில் இணைய வேண்டும் என்று எடப்பாடி பழனிச்சாமி கூறுகிறார். ஆனால் டி.டி.வி. தினகரனையோ ஓ.பி.எஸ்.ஸையே சேர்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி இருக்கிறாரா என்பதை அவர் கொடுத்துள்ள பேட்டியிலேயே பார்த்துக் கொள்ளுங்கள். இதிலிருந்து அவர்களுக்குள் ஒத்த கருத்து இல்லை என்பது தெரிகிறது.

பியூஸ்கோயல் அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்காக வருகிறார். அவருக்கு தமிழ்நாட்டுடைய அரசியல் தட்பவெட்ப நிலை தெரியாது. அதனால் நிச்சயமாக அவர் நினைப்பது தமிழ்நாட்டில் நடக்காது.

எத்தனை முனை போட்டிகள் நடந்தாலும் தி.மு.க.வை வீழ்த்த முடியாது. சாக்கு போக்கு சொல்வதற்காக நயினார் நாகேந்திரன் இருமுனைப் போட்டி என்பதை முன் வைத்திருக்கிறார். எத்தனை முனை போட்டி வந்தாலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செய்துள்ள இந்த ஐந்தாண்டு கால சாதனை தி.மு.க. கூட்ட ணிக்கு மிகப் பெரிய வெற்றியை நிச்சயம் பெற்று தரும்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெளிவாக சொல்லிவிட்டார். தலைவர் மு.க.ஸ்டாலின் இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆக்குவது தான் எனது கடமை என்னுடைய பணி என்று தெளிவாக சொல்லிவிட்டார். இதிலிருந்து முதலமைச்சருக்கான போட்டியில் உதயநிதி இல்லை திமுக தலைவரை முதலமைச்சராக ஆக்குவதற்கு தான் அவர் தேர்தல் களத்தில் மும்முறமாக பணி புரிகிறார்.

எடப்பாடி பழனிச்சாமி அவரது ஆட்சி காலத்தில் பொங்கல் பண்டிகையின் போது ஐயாயிரம் ரூபாய் கொடுத்து இருக்கலாம் கொடுக்காமல் இருந்திருக்கலாம். நாங்கள் தற்பொழுது இதைப் பற்றி சொல்ல மாட்டோம் என்ன என்பது ரகசியமாகத்தான் இருக்கும். திடீரென்று தான் அறிவிக்கப்படும்.

ஒரு கண்ணில் வெண்ணை ஒரு கண்ணில் சுண்ணாம்பு என்பது பாஜகவின் கொள்கை. எங்களின் கொள்கை அல்ல. திருப்பரங்குன்றத்தில் சிக்கந்தர் தர்கா இருக்கிறது. தர்காவில் ஆண்டுதோறும் நடைபெறும் விழா தான் அதற்கு வழிபாடு செய்ய அனுமதி கொடுப்பது தவறில்லை. திருப்பரங்குன்றம் பிரச்சனையை இதுவரை யாரும் எழுப்பியதாக வரலாறு கிடையாது முதல்முறையாக தமிழ்நாட்டில் கால் ஊன்ற வேண்டும் என்பதற்காக எதைச் சொல்லி மக்களை திசை திருப்பலாம் என்பதற்காக பாஜக ஆர்எஸ்எஸ் சோடு சேர்ந்து போட்ட திட்டம். அது இன்று தோல்வி அடைந்துள்ளது. தமிழ்நாடு மக்கள் விழிப்புணர்வு உள்ளவர்கள் அவர்களுக்கு எது சரி எது தவறு என்பது தெரியும்.

இ ஃபைலிங் முறை என்பது விரைந்து அந்த பணியை செய்வதற்காகவும் இருந்த இடத்திலிருந்து வழக்கை பைல் செய்ய முடியும் என்பதற்காக கொண்டுவரப்பட்டது. தற்போது அனைத்து இடத்திலேயுமே ஆன்லைன் இபைலிங் தான் இருக்கிறது. நீதிமன்ற விசாரணை கூட காணொளி காட்சி மூலமாக நடக்கிறது. இ ஃபைலிங் முறையில் தாமதம் ஏதும் இருப்பது தெரிய வந்தால் அது கண்டறியப்பட்டு அந்த தாமதத்தை நீக்குவதற்கான நடவடிக்கையை அரசு செய்யும்.

இ ஃபைலிங் முறையை நீதிமன்றம் வழக்கறிகளுக்காக கொண்டுவந்துள்ளது நீதிமன்றம் இ ஃபைலிங் முறையை கொண்டு வந்துள்ளதால் அதில் அரசு கருத்து சொல்ல இயலாது.

செவிலியர் போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களால் எந்த நெருக்கடியும் வராது. எல்லா நெருக்கடியும் சுலபமாக தீர்க்கப்படும். நிச்சயமாக அனைவரின் ஆதரவோடு மீண்டும் திராவிட மாடல் ஆட்சி பார்ட் 2 திமுக தலைவர் மு. க. ஸ்டாலின் தலைமையில் தொடரும்.

அதிமுகவால் மெகா கூட்டணி அமைக்க முடியாது. திமுக கூட்டணியில் இருந்து ஒரு செங்கலை கூட உருவ முடியாது.

அரசியல் எதிரிகளாக புதிய கட்சிகளையோ எதையுமே பார்க்கவில்லை. திராவிட மாடல் ஆட்சியினுடைய கருத்துக்கு எதிரானவர்களை நாங்கள் எதிரிகளாக பார்க்கிறோமே தவிர யாரையும் நாங்கள் எதிரிகளாக பார்க்கவில்லை.

பழுத்த மரத்தில்தான் கல்லடி படும். அதனால்தான் அனைவரும் திமுகவை நோக்கி வந்தால்தான் அவர்களுக்கு விளம் பரம் கிடைக்கும். தி.மு.க.வை சொல்லித் தான் வர முடியும் பேச முடியும். திமுக தான் எதிரி என்று சொன்னால்தான் திரும்பி பார்ப்பார்கள். அதனால்தான் திமுகவை சொல்லி வருகின்றனர். இதிலிருந்தே தி.மு.க. என்பது தமிழ்நாட்டின் அசைக்க முடியாத சக்தி என்பதை தெரிந்து கொள்ளலாம்.

நயினார் நாகேந்திரனுக்கு நாடக கம்பெனி எல்லாம் பழைய காலத்தில்தான் இருந்தது. தற்போது வள்ளி திருமணம் நாடகம் எல்லாம் போட்டால் யாரும் போய் பார்ப்பதில்லை. அதனால் அவருக்கு இதெல்லாம் தெரியவில்லை தூக்கத்திலிருந்து தற்போது தான் விழி த்துள்ளார். தலைவர் பதவி கிடைத்தவுடன் தூக்கத்தில் இருந்து விழித்தவர் தான் பார்த்த வள்ளி திருமண நாடகங்களையும் மற்ற நாடகங்களையும் நினைத்துக் கொண்டு விடிய விடிய நடக்கும் என்று நினைத்து சொல்லி வருகிறார். நிச்சயமாக இது நாடக கம்பெனி அல்ல நல்ல அறிக்கைகளையும் நல்ல திட்டங்களையும் தமிழ்நாட்டிற்கு தருகின்ற தேர்தல் அறிக்கைக்குழு தான் தி.மு.க. தேர்தல் அறிக்கை குழு என்று தெரிவித்தார்.

### தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில்

# மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் கண்டன உரை!

தருமபுரி, டிச. 26 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணைக்கிணங்க, தருமபுரி மேற்கு மாவட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டி, கடத்தூர், தருமபுரி, காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஆகிய 5 ஒன்றியங்களில் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பாப்பிரெட்டிப் பட்டி, வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பெற வலியுறுத்தியும், இச்சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்தும், அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.கவைக் கண்டித்தும் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்பாட்டத்தில் 19 ஊராட்சியை சார்ந்த 100 நாள் வேலை திட்ட பயனாளிகள் 3000 நபர்கள் கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.

இக்கண்டன பேருரையில் மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளியோர் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதையும், தமிழ்நாட்டிற்கு ஏற்படும் நிதிச்சுமை மற்றும் பாதிப்புகள் குறித்து உரையாற்றி கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.

இக்கூட்டத்தில் மதச்சார்பற்ற கூட்டணியின் திராவிடர் கழகம் சார்பில் கு.தங்கராசு, பொன்.அய்யனார், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் வேலன், வி.சி.க சார்பில் J.K.தமிழ்அன்வர், அதியமான், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் S.கமலா மூர்த்தி, M.மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் முத்து, ம.தி.மு.க சார்பில் சுகவனம், குமரவேல், கொ.ம. தே.க சார்பில் தவமணி, சக்திவேல், ராஜா, மனிதநேய மக்கள் கட்சி சார்பில் ஏ.அஸ்லாம், தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் முனியப்பன், இந்திய தேசிய முஸ்லீம் லீக் கட்சி சார்பில் எஸ்.சஜீர் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, தலைமை செயற்குழு உறுப்பினர் ரா. சித்தார்த்தன், பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் சி.முத்து க்குமார், பி.எஸ். சரவணன், பேரூர் கழக செயலாளர்கள் கொ.ஜெயச்சந்திரன், கு.கௌதமன், பேரூராட்சி தலைவர் எம்.மாரி மற்றும் கழக நிர்வாகிகள், மதச் சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

## சேலம் மத்திய மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க, கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு

சேலம் மத்திய மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட இளந்திரையன் அவருக்கு பதிலாக

**அ. அபு (எ) மஹபூப் அலி** (67/6, பி.சி. பழைய மார்க்கெட் தெரு, முகமதுபுறா, சேலம் - 1) அவர்கள் சேலம் மத்திய மாவட்ட கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"** சென்னை - 18. நாள் : 24.12.2025.

**வாகை சந்திரசேகர்** தலைவர் தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை